## 51. தெரிந்து தெளிதல்

**501.** *அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்*
*திறந்தெரிந்து தேறப் படும்*

**அறங்களை மதித்து நடப்பதும்**
**அற வழியில் பொருள் சம்பாதிப்பதும்**
**அற்பமான இன்பங்களை விரும்பாததும்**
**அவசியமான நேரத்தில் உயிருக்கு அஞ்சாததும்**
**அவை நான்கின் திறன்களை ஆராய்ந்து**
**அறிந்து ஒருவனைச் செயலாக்கத் தேர்ந்தெடுக்க வேண்டும்**

**502.** *குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்*
*நாணுடையான் கட்டே தெளிவு*

**நல்ல குடும்பத்தில் பிறந்து**
**நவை என்ற குற்றத்திலிருந்து நீங்கி**
**நடுங்க வைக்கும் பழிச்சொல்லுக்கு நாணி**
**நயந்து விளையும் இந்த நற்குணங்களை உடையவனை**
**நம்பி நம் செயலுக்குத் தேர்ந்தெடுக்கலாம் !**

**503.** *அரியகற் றாசற்றார் கண்ணுந் தெரியுங்கால்*
*இன்மை அரிதே வெளிறு*

**அறிவுக்குரிய பல நூல்கள் கற்றலும்**
**அய்யம் பல தெளிவு பெற்று**
**அறவே குற்றமற்றவராக இருந்தாலும்**
**அவரிடம் அறியாமையே இல்லை என**
**அறுதியிட்டுக் கூற முடியாது !**

**504.** *குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்*
*மிகைநாடி மிக்க கொளல்*

**ஒருவரின் குணங்களையும் குறைகளையும்**
**ஒருங்கே கூட்டிக்கழித்து ஆராய்ந்து – இரண்டில்**
**ஒன்று எது மிகுதி என்றே தெரிந்து**
**ஒருவரைப் பற்றி முடிவு கொளல் வேண்டும் !**

**505.** *பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்குந் தத்தங்*
*கருமமே கட்டளைக் கல்*

**உள்ளபடி ஒருவரின் பெருமையையும், சிறுமையையும்**
**உணர்ந்து கொள்ள பொன்னின் மாற்றை**
**உரைக்கும் உரைகல்லாக வீற்றிருப்பது அவர்**
**உருவாக்கும் செயல்களே !**

*506.* *அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றவர்*
*பற்றிலர் நாணார் பழி*

**சுற்றத்தார் எவரையும் பெற்றில்லாதவரைச்**
**சுத்தமாக நம்புதல் கூடாது ! – ஏனெனில்**
**உலக வாழ்க்கையில் பற்றில்லாதவர்கள்**
**உண்டாகும் பழிக்கு அஞ்சாதவராகவும் இருப்பர் !**

*507.* *காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்*
*பேதைமை எல்லாந் தரும்*

**அறிந்து கொள்ள வேண்டியவற்றை**
**அறிந்து கொள்ளாத அறிவிலிகளை**
**அன்பின் காரணமாகத் தேர்ந்தெடுத்தால்**
**அத்துணைத் துன்பங்களையும் தரும் !**

*508.* *தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை*
*தீரா இடும்பை தரும்*

**வந்த வழி தெரியாமல்**
**வந்த எவனோ ஒருவனை**
**வகையாக ஆராயாமல் தேர்ந்தெடுத்தால்**
**வம்சா வழிக்கே கடுந்துன்பம் வரும் !**

*509.* *தேறற்க யாரையுந் தேராது தேர்ந்தபின்*
*தேறுக தேறும் பொருள்*

**தேர்ந்தெடுப்பதற்கு முன்பு ஒருவரை**
**தேர்ந்த ஆராய்ச்சி நடத்தித் தெளிவு பெற்று**
**தேர்வு செய்ய வேண்டும் ! தெளிந்த பின் – அவனிடம்**
**தேர்ச்சி பெற்ற தொழிலை ஒப்படைக்க வேண்டும் !**

*510.* *தேரான் தெளிவுந் தெளிந்தான்கண் ஐயுறவும்*
*தீரா இடும்பை தரும்*

**தெளிவாக ஆராயாமல் ஒருவனைத் தேர்ந்தெடுப்பதும்**
**தெளிவாக ஆராய்ந்துத் தேர்ந்தெடுத்துவிட்டு – அவன் மீது**
**தெளிவில்லாமல் சந்தேகப்படுவதும் – எப்போதும்**
**தென்படும் பெருந்துன்பமே !**

## 52. தெரிந்து வினையாடல்

**511.** *நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த*
*தன்மையான் ஆளப் படும்*

**நன்மையும் தீமையும் எதுவென**
**நன்கு ஆராய்ந்து பின்னர்**
**நற்செயல்களில் மட்டுமே நாட்டம்**
**நல்கியவன் நல்லதொரு செயல் வீரனாவான் !**

**512.** *வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை*
*ஆராய்வான் செய்க வினை*

**வருவாய் வரும் வழிகளைப் பெருக்கி**
**வளமான செல்வங்களை வளர்த்து**
**வரும் துன்பங்களை ஆராய்ந்துப் போக்கிடும்**
**வல்லவனே செயல் வீரனாவான் !**

**513.** *அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்*
*நன்குடையான் கட்டே தெளிவு*

**அன்பு, அறிவு, செயலாற்றும் தன்மை,**
**அதிகம் ஆசைப்படாத குணம் ஆகிய**
**அவை நான்கு பணிவுகளையும்**
**அருமையாகக் கொண்டவனை**
**அங்ஙனம் தேர்வு செய்வதே நல்லது !**

**514.** *எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்*
*வேறாகும் மாந்தர் பலர்*

**எவ்வளவுதான் பலவகை வழிமுறைகளை**
**எடுத்து அறிந்து ஆராய்ந்து தெளிந்து தேர்ந்தெடுத்தாலும்**
**செயல்படும் போதும் எப்படியோ வேறுபடுபவர்கள்**
**எத்துணையோ மாந்தர் பலர் உண்டு !**

**515.** *அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்*
*சிறந்தானென் றேவற்பாற் றன்று*

**வழிமுறைகளை நன்கு அறிந்து செயலாற்றி**
**வருகின்ற துன்பங்களை தாங்கிக் கொண்டு**
**வரையறுத்த செயலை முடிப்பவனைத் தவிர்த்து**
**வரன்முறையற்ற காரணத்திற்காக வேறொருவரை ஏவாதல் நன்று !**

*516.* *செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ*
*டெய்த உணர்ந்து செயல்*

**செயலாற்றும் செயல் வீரனைத் தேர்ந்தெடுத்து**
**செய்யப்பட வேண்டிய செயலையும் ஆராய்ந்து**
**செய்ய வேண்டிய காலத்தையும் உணர்ந்து**
**செயல்களைச் செயல்படுத்த வேண்டும் !**

*517.* *இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்*
*ததனை அவன்கண் விடல்*

**இந்தச் செயலை**
**இந்தக் கருவியின் துணையால்**
**இலகுவாக வெற்றிகரமாக**
**இவன் முடிப்பான் என ஆராய்ந்த பின்**
**இனிதாய்ப் பொறுப்பை ஒப்படைத்தல் வேண்டும் !**

*518.* *வினைக்குரிமை நாடிய பின்றை அவனை*
*அதற்குரிய னாகச் செயல்*

**செயலைச் செய்து முடிக்க இவனே**
**செயல் வீரன் என தேர்ந்தெடுத்த பின்பு**
**செய்யும் முழுப்பொறுப்பையும் அவனிடம் தந்து விடல் நன்று !**

*519.* *வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக*
*நினைப்பானை நீங்குந் திரு*

**காரியத்தை முடிப்பதில் கண்ணும் கருத்துமாக**
**கணப் பொழுதும் வீணின்றிக் கச்சிதமாக செயலாற்றும் உரிமைக்**
**கண்ணோட்டத்தை வேறாக – தவறாக**
**கணிப்பவனை விட்டு நீங்குவாள் இலக்குமி !**

*520.* *நாடோறு நாடுக மன்னன் வினைசெய்வான்*
*கோடாமை கோடா துலகு*

**உழைப்பவர் உள்ளம் வாடாமலிருந்தால்**
**உலகின் செழிப்பு வாடாமல் இருக்கும் !**
**உலகை ஆளும் வேந்தன்**
**உழைப்பாளர் நலத்தில் அக்கறை காட்டி எப்போதும்**
**உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் !**